**அக்டோபர்: 18**

**ஆண்டவருடைய சரீரத்தை கல்லறையில் வைத்து முத்திரையிட்டு காவல் காத்தனர்.**

**வாசிக்க: மத்தேயு 27:57- 66**

நம் ஆண்டவர் சிலுவையில் தம் ஜீவனை விட்ட பின்பு, சாயங்காலமான போது, இயேசுவுக்குச் சீஷனும் ஐசுவரியவானுமாயிருந்த யோசேப்பு என்னும் பேர்கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒரு மனுஷன் பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான். அப்பொழுது, சரீரத்தைக் கொடுக்கும்படி பிலாத்து கட்டளையிட்டான். யோசேப்பு அந்தச் சரீரத்தை எடுத்து, தூய்மையான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, அவனுக்கு சொந்தமான புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்துப் போனான். ஆயத்தநாளுக்குப் பின்னான மறுநாளிலே பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் கூடிவந்து: ஆண்டவனே, அந்த எத்தன் உயிரோடிருக்கும்போது, மூன்றுநாளைக்குப்பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது. ஆகையால், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய், மரித்தோரிலிருந்து எழுந்தானென்று ஜனங்களுக்குச் சொல்லாதபடிக்கும், முந்தின எதைப்பார்க்கிலும் பிந்தின எத்து கொடிதாகாதபடிக்கும், நீர் மூன்றுநாள்வரைக்கும் கல்லறையைப் பத்திரப்படுத்தும்படி கட்டளையிடவேண்டும் என்றார்கள். அதற்குப் பிலாத்து: உங்களுக்குக் காவல்சேவகர் உண்டே, போய், உங்களால் கூடியமட்டும் பத்திரப்படுத்தி கொள்ளுங்கள் என்றான். அவர்கள் போய்க் கல்லுக்கு முத்திரைபோட்டு, காவல்வைத்து, கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள்.




சில நாட்களாக நாம் நம்முடைய ஆண்டவரின் "சிலுவை பிரயாணத்தை" தியானித்தோம். ஒரு சில இடங்களில் அவர் கடந்து வந்த பாதையை படிக்கவும், எழுதவும், தியானிக்கவும் நமக்கே கடினமாக இருந்தது. ஆனால் அவர் அதையும் செய்து முடித்தார். அவர் பிதாவின் மேல் வைத்த நேசமும், நம் மேல் வைத்த பாசமும் தான் அந்த பாதையை கடந்து வர ஆண்டவருக்கு துணையாக இருந்தது. அவருடைய சிலுவை மரணம் நமக்கு விடுதலையை தந்து ஒரு புதிய ஆரம்பத்தை துவக்கியது உண்மை. ஆனால் அதோடு முடிகிற நிகழ்ச்சியல்ல. அவர் மூன்றாம் நாள் உயிரோடு எழுந்து வந்து நம்மை ஜெயமுள்ள வாழ்க்கைக்குள் நடத்த வாக்குபண்ணியுள்ளார். ஆனால் நம் கண்முன்னே அவர் சரீரத்தை கல்லறையில் வைத்து முத்திரை போட்டு காவல் வைத்திருப்பது நம் விசுவாசத்தை மட்டுபடுத்த பார்க்கிறது. கடினமான, வேதனையான பாதையை நமக்கு சொன்னபடியே அவர் செய்து முடித்திருக்கையில், சுலபமான, மிகுந்த சநாதோஷமானதை வாக்கு பண்ணிய படியே அவர் செய்யமாட்டாரா.? ஆனால் இடையிலே ஒரு சனிக்கிழமையை கடந்து செல்வதே நமக்கு மிகசிரமமான காரியமாக இருக்கிறது. செல்லங்களா, நீங்க கஷ்டமான நாட்களையெல்லாம் சகிச்சிட்டீங்க. இப்போ காத்திருக்க வேண்டிய சனிக்கிழமையை கடந்தால் வெற்றியுள்ள ஞாயிறை சந்திக்க போகிறீர்கள். ஆகவே கலங்காமல் திகையாமல் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவையே துதித்து கொண்டு காத்திருங்கள். நிச்சயமாக உங்கள் நம்பிக்கை வீண்போகாது.

தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? ரோமர் 8:32

**ஜெபம்**

பரிசுத்தமுள்ள எங்கள் தகப்பனே, நீங்க எங்களுக்கு பாராட்டிய தயவு, கிருபை, அன்பை சொல்லி துதிக்க கூடிய வார்த்தைகள் எந்த மொழியிலுமில்லைய்யா..! உங்கள் மேல் வைத்த விசுவாசத்தை காத்து கொள்ள கிருபை தாரும். இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.

